# ஆந்தைப் பாட்டில் அழகியல்

**முனைவர் ம.ஏ.கிருட்டினகுமார்**
உதவிப் பேராசிரியர்
காஞ்சிமாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம்
புதுச்சேரி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

குயில்பாட்டைப் போலவே புனையப்பட்டிருக்கும் ஆந்தைப்பாட்டு ம. இலெ. தங்கப்பாவின் புலமை நலத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இயற்கையே இனிது என்னும் தம் கொள்கையில் மாறாது நிற்கும் இப்படைப்பாளியின் எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கப்பட்டதாகவே இப்பாட்டு அமைந்துள்ளது. கவிஞனின் மனம் அழகியலில் ஈடுபடுதல் இயற்கை. அவ்வழகானது மனத்தின் அடிப்படையில் நிகழும் என்பதனை நிறுவும்வகையில் ஆயிரத்து முப்பத்து நான்கு (1034) அடிகளில் கலிவெண்பாவால் இப்பாடல் புனையப்பட்டுள்ளது. இப்பாட்டில் இடம்பெறும் அழகியல் நிலையைக் காணவிழைந்ததன் விளைவாகவே இக்கட்டுரை அமைகிறது.

### ஆந்தைப்பாட்டின் கரு

சமூக அவலங்களால் நொந்துபோன கவிஞரின் உள்ளம் அமைதியை நாடுகிறது. சுடுகாடே போக்கிடமாகக்கொள்ளும் கவிஞரின் உள்ளம் ஆந்தையின் அலறலைக் கண்டு மனம் கரைகிறது. ஆந்தையிடம் பேச விழைகிறார் கவிஞர். கன்றுக்கான பசுவின் பாலை கறந்துகுடிக்கும் தன்னலம் போல் பல கீழான செயல்களைச் செய்யும் மனித இனத்தையே வெறுக்கும் ஆந்தையானது கவிஞரிடம் பேச மறுக்கிறது. தானும் அத்தகைய மனிதர்களை வெறுத்தே இங்கு வந்துள்ளதைக் கூறியபின் அவரிடம் பேசுகிறது. ஆந்தையானது தான் முற்பிறவியில் ஏழைப் பெண்ணாக வளர்ந்ததனையும் தீவிபத்தில் சிக்கியதால் ஒற்றைக்கண் பார்வை குறைந்து இருந்ததனையும், அதனால் திருமணம் நடைபெறாமல் தள்ளிப்போனதனையும், அழகே இல்லாத ஒருவன் மணப்பெண் பார்க்க வந்து அழகு குறைந்துள்ளதால் நிறைய மணக்கொடைக் கேட்டதனையும் அதனால் மனம் நொந்து இரவில் மன ஆறுதலுக்காக வெளியே சென்றதனையும் அத்தனிமைச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு அவள் வாழ்வைப் பெண் பார்க்க வந்தவன் சீரழித்ததையும் அதனால்தான் தற்கொலை செய்துக்கொண்டதனையும் கூறுகிறது. கவிஞரின் மனம் மேலும் கரைகிறது. பின்னர் விழித்துப் பார்க்கும்போது நடந்ததெல்லாம் கனவா? நினைவா? என்பது தெரியாமலே போகின்றது. மகாகவிபாரதியின் குயில்பாட்டு போன்றே மாயையின் விளையாட்டாக உணர்வுடையோர் உணர்ந்துகொள்ளும் வகையிலேயே இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**அன்பே அழகு**

உயிர்களிடம் கொள்ளும் அன்பே அழகானது. உயிரைக் காணும் ஆற்றல் உடையவர் எவரும் அனைத்து உயிர்களிடமும் அன்போடே பழகுவர். உயிரைக் காணும் ஆற்றல் இல்லாதவரிடம் அன்பை எதிர்பார்ப்பின் வெறுமையே எஞ்சும். அன்புடையவர்களால் எதிலும் அழகினைக் காணவியலும் என்னும் நிலையினை உணர்த்தும் வகையிலே இயற்கை ஆர்வலரான ம.இலெ. தங்கப்பா இப்பாடலைப் பாடியுள்ளார். அன்பானது உயர்வு, தாழ்வு என்னும் வரையறைக்குள் அடங்குவதில்லை. அனைவரையும் மயக்கும் குயில்பாட்டின் இனிமையைக் காண்பதோடு நில்லாமல் ஆந்தை அலறலின் அருமையையும் உணர்வதே அன்புள்ளம் என்னும் தம் உள்ளக்கருத்தின் வழி புனையப்பட்டுள்ள பாடலாகவே இந்நூல் அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது.

தன்னுணர்ச்சிக்கு வடிகாலாகத் தம் படைப்புகளை படைப்பதில் முன்னிற்பவர்களே கவிஞர்கள். அவ்வகையில் அனைத்து உயிர்களிடமும் அன்பு பாராட்டும் ம.இலெ. தங்கப்பா ஆந்தையின் அலறலுக்கான காரணத்தைக் காண விழைந்துள்ளதனை இந்நூல் படம்பிடித்துக் காட்டுகிறது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்னும் பொன்மொழியின்படி கவிஞர் உலகில் நடக்கும் அவலங்களைக் கண்டு மனம் நொந்து அதற்கான விடையைக் காண இயற்கையைத் தேடி ஓடுகிறார். பொதுவாக மலையினையும் கடலினையும் கண்டு அமைதி தேடும் கவி உள்ளத்தின் வழி இந்நூலாசிரியரும் இயற்கையைத் தேடிச்செல்வதனை

**அன்பற்ற பொய்யுலகின் ஆர்ப்பரிப்பை எண்ணி எண்ணித்**
**துன்புற்ற நெஞ்சால் துளைபட் டிருந்தநான்**
**ஆற்றோரம் சென்றால் அமைதி கிடைக்குமென**
**மேற்றிசையை நோக்கி நடந்தேன் நெடுங்கரைமேல்** (7-10)

என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றன. பொழிலில் கிடைக்கும் அமைதியைக் காட்டிலும் சுடுகாட்டில் கிடைக்கும் அமைதியினைப் பெரிதென எண்ணிச் சுடுகாட்டிற்குச் செல்கிறார். சுடுகாட்டினைக் கண்டு அச்சம் கொள்ளாமல் பொதுவுடைமை நிலவும் இடமாக எண்ணி தம் மனத்தைத் தேற்ற விழைவதனை

**ஒன்றேதான் இந்த உடம்பின் முடிவெனல்போல்**
**வெட்ட வெளியில் வியன்காடு நேர்நிமிர்ந்து**
**குட்டை உலகின் குலுக்கைச் சிரித்ததுவே** (37-40)

என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றன. பொய்யுடம்பினை மெய்யுடம்பு என எண்ணிக்கொண்டு தன்னலத்துடன் வாழும் மக்களின் இழிநிலையினை மாற்ற வேண்டியதன் அவசியத்தினை எடுத்துரைக்கிறார். மெய் எனக் குறிப்பிடப்படுவது பொய்யுடம்பே என்னும் மெய்யியலை உணர்த்தும் சுடுகாட்டினிலேயே அமைதியைத் தேடுதல் நன்று என எண்ணுகிறார் நூலாசிரியர். நான் என்னும் அகப்பற்றையும் எனது என்னும் புறப்பற்றையும் அறவே நீக்கும் வல்லமை சுடுகாட்டில் புதையாமல் இருப்பதனையே இவ்வடிகளின்வழி எடுத்துரைக்கிறார் நூலாசிரியர். மண் உண்ணும் மனித உடலே தன்னுடல் என அறியாத மனிதன் மண்ணுக்காகவும் பொன்னுக்காகவும் பெண்ணுக்காகவும் மயங்கும் குறுகிய மனநிலையினையும் அறியாமையினையும் எண்ணி காடு சிரிப்பதாகக் காட்டுவது இங்கு சீர்தூக்கி எண்ணத்தக்கது.

**உலகியல் நிலை**

இருக்கும்வரை பொருளின் அருமையினை உணராது இழந்தபின் அப்பொருளின் அருமையினை உணர்தலே மக்களின் மன நிலையாக அமைகிறது. வீட்டில் கோலம் கலைக்கப் பிள்ளை இல்லையே என வருந்துவோர் பெற்ற பிள்ளையால் கோலம் கலைக்கப்படின் அதனைப் பொறுத்துக்கொள்ள மனமில்லாது தண்டிக்கும் நிலை இருப்பதனைக் காணமுடிகிறது. இவ்வாறு வாழும் மனிதர்களின் இயல்பான மனநிலையினை

**சாகுமட்டும் வைவார் 'சனியன்' என்பார் 'பீடை' என்பார்**
**போகும் உயிரைப் புறமிருந்து தள்ளிடுவார்**
**அந்த உயிர் போனபின்போ 'ஐயா இறந்தனையோ?**
**எந்தாய் இறந்தனையோ? யாயே மடிந்தாயோ?** (79-82)

என்னும் அடிகளின் வழி தெளிவுறுத்துகிறார். மனிதர்களின் ஒவ்வொரு செயலும் பிறரை வாழ்விக்க வேண்டுமேயன்றி பிறரை வருத்துவதாக அமைதல் கூடாதென்பதனை வலியுறுத்துவதாகக்கொள்ள முடிகிறது. இல்லத்தில் மூத்தோர் பசித்திருக்கப் பிறருக்குக் கொடையளித்தல் நற்பண்பாகாதென்பதனை இதன்வழி உணர்த்தியுள்ளதனையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

### ஒளியும் நல்லோர் வாழ்வும்

இருளை விலக்கி ஒளியை விளக்கும் விளக்கின் ஒளி, பொழுது வளர வளர குன்றிப்போகும் நிலையினை நல்லோரின் வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டுவதனை

**அண்மையிலோர் கல்லறையில் ஆரோ விளக்கெடுப்ப**
**மண்டும் இருள்நடுவில் அந்த மணிவிளக்கும்**
**பொல்லாக் குளிர்காற்றில் போராடிப்போராடி**
**நல்லவர்தம் வாழ்வைப்போல் நைந்து கழிந்ததையும்** (119-122)

என்னும் அடிகளின் வழி அறிந்துகொள்ள முடிகிறது. சுடுகாட்டில் மணிவிளக்கின் ஒளியைக் காணும் கவியுள்ளம் அந்த ஒளி குறுகிப்போவதனை இன்றைய சமுதாயத்தில் நல்லோர் அடிமைப்பட்டு நொந்து அழியும் வாழ்வியல் நிலையோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

### ஆந்தையின் என்பதிரும் பாடல்

ஒலிகள் உணர்ச்சியின் வடிவங்களாகக் காண்பது கவிஞர்களின் இயல்பே. எனவே ஒலிக்குறிப்பினையும் சொற்களாக மாற்றிவிடும் போக்கானது கவிவல்லார்க்கு இயல்பாகவே அமைந்துவிடுவதனைக் காணமுடிகிறது.

**துன்ப உலகத்தின் துடிப்பெல்லாம் கொட்டுதல்போல்**
**என்பதிரப் பாடல் இசைத்திருக்க நான் கேட்டேன்** (131-132)

என்னும் அடிகள் ஆந்தையின் அலறலானது, என்பினை அதிரவைக்கும் அவலத்தினை வெளிப்படுத்துவதாகக் கவிஞர் உணர்வதனை எடுத்துக்காட்டுகிறது. பறவைகளின் கழறலை அறிந்துகொள்ளும் வல்லமை இருந்ததனாலேயே கழறிற்றறிவார் என்னும் அடியார் வாழ்ந்ததனைப் பெரியபுராணம் எடுத்துக்காட்டியுள்ளது இங்கு எண்ணத்தக்கது.

### ஆந்தையின் அழகு

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்னும் மனநிலையிலேயே கவிஞர்கள் அனைத்து உயிர்களையும் காணும் நிலையினை

**வட்டக் கருவிழியும் வன்மை அலகும் மிகக்**
**குட்டைக் கழுத்தும் குவிஉடம்பும் என் நெஞ்சில்**
**ஆழப் பதிந்தென் அகத்தில் இனித்ததுவே**
**சூழும் இயற்கைநலம் சோர்வு படுவதுண்டோ?** (207-210)

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. இயற்கை படைப்பின் பொருள் உணராமல் குற்றம் சொல்லும் அறியாமையினை இங்கு எடுத்துக்காட்டியுள்ளார் நூலாசிரியர். ரோசாவைச் சுற்றி முள் இருப்பதாகக் கொள்ளாமல் முட்களுக்கிடையே ரோசா மலர்ந்திருப்பதனைக் காணும் கவியுள்ளம் இங்கு வெளிப்பட்டுள்ளதனையும் காணமுடிகிறது. பெரிய கருவிழியினை வட்டக் கருவிழி என்று எழிலுற எடுத்துக்காட்டியுள்ளதனையும் காணமுடிகிறது. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போன்று ஆந்தையைக் காட்டின் தனிஅரசியாகப் போற்றும் கவி உள்ளத்தை

**கங்குல் பறவையே, காட்டின் தனியரசி** (213)

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

### ஏற்றத்தாழ்வு

பகுத்தறிவின் உறைவிடமாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் மனிதர்கள்˙ தமதறிவு ஆறறிவு எனக்கூறிக்கொள்ளும் மனிதர்கள், தம்மிடையிலேயே பல ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கிக்கொண்டு வருந்துவதனையும் வருத்துவதனையும் நூலாசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

**ஏழை பணியாள் இரப்போன் கொடுங்கள்வன்!**
**கீழாம் நிலையிவற்றைக் கேட்டதுண்டோ எம்மினத்தில்? (259-260)**

என்னும் அடிகள் பறவைகளிடையே ஏற்றத்தாழ்வின்றி உழைத்து செம்மாந்து வாழும் இயல்பிருப்பதனை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் தம்மை அண்டி வாழும் விலங்குகளையும் வருத்தி அவற்றின் பயனைக்கொள்ள விழையும் அவலப்போக்கினை

**அன்பென் றுரைப்பீர் அதன்பேரால் தீங்கு செய்வீர்**
**கன்றதனைக் கொன்று கறவைப்பால் நீர்கொள்வீர் (271-272)**

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. மாடு தன் கன்றுக்காக மடியில் சேர்த்து வைத்திருக்கும் பாலை மனிதர்கள் கன்றுக்கு ஊட்டுவதுபோல் ஊட்டவைத்து, பால் சுரக்கத் தொடங்கியதும் கன்றினை இழுத்துக்கட்டிவைத்துவிடும் கயமைப்போக்கினைக் கண்டு மனம் வருந்துகிறார் கவிஞர். ஆங்கிலேயர் பசுவின் அருமை அறிந்து அவற்றைக் கொன்றாலன்றி தமிழரின் வளத்தைக் கைக்கொள்ள இயலாது என்பதனை உணர்ந்து பசுக்களைக் கொன்றதனையும் அதனால் தமிழர்கள் நோயின்றி வாழத்துணைசெய்த நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டுப்பசு வகைகள் அழிந்துபோனதனையும் காணமுடிகிறது. இன்று இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களையே பயன்படுத்தும் நிலைவந்துவிட்டதனையும் அதனால் குழந்தைகள் முதல் பெரியோர்வரை எதிர்ப்புச்சக்தியின்றி நோய்வாய்பட்டிருப்பதனையும் காணமுடிகிறது. தமிழரின் வாழ்வியல் முறை முற்றிலும் மாறிவிட்டதனைக் கண்டு மனம் வருந்துகிறார் இந்நூலாசிரியர். அனைத்து உயிர்களிடமும் காதல்கொண்டு வாழும் கவியுள்ளத்தையும் கவி நுட்பத்தினையும் இங்கே ஒருங்கே காணமுடிகிறது. பிற உயிர்களின் நன்மையினை அறியாது வாழும் மனிதர்களைப் போலன்றி, கருணை உள்ளத்தோடு வாழ்பவர்களே கவிஞராகின்றனர். அத்தகைய கவிஞர்கள்கூட தம்மைக் கண்டு கொள்ளாத பறவையினமாகத் தம்மினம் இருந்து வருந்துவதனை

**ஏடெழுதும் பாவலரும் என்னை நினைந்திலரால்**
**கேடேதும் செய்தறியேன்˙ கீழினமாய் ஆனதென்ன**
**அன்பொழுகிப் பேசி எனக்கு ஆறுதலே செய்யவந்தோர்**
**உம்போற் பிறிதொருவர் ஓரிடத்தும் கண்டதில்லை (459-462)**

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. கவிஞர் பறவையின் மன நிலையிலிருந்து பாடும் அழகினை இங்குக் காணமுடிகிறது.

### பெண்ணுக்கு அழகு

அழகு என்பது புறத்தோற்றத்தால் காணும் அழகினையே பொதுவாகக் குறிக்கிறது. ஆழ்ந்து அகப்பண்பினை நோக்குதல் சான்றோர்க்கு மட்டுமே நோக்காகிறது. பணிவுடன் இன்சொல் பேசுவதே அணி என்னும் தெய்வப்புலவரின் கூற்று இங்கு எண்ணத்தக்கது. அவ்வாறு புற அழகின்றிப்போனதனால் விளைந்த இன்னலை

**நாணம் மடமுதலா நல்லியல்பு வாய்ந்திருந்தும்**
**பேணும் அழகென்னும் பெற்றியற்றுப் போய்விட்டாள் (527-528)**

என்னும் அடிகளின் வழி எடுத்துக்காட்டியுள்ளார். பெண்ணுக்குத் தேவையான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்களைக் காட்டிலும் புற அழகான வெளுப்பான, மினுமினுப்பான தோற்றமே பெரிதென இன்றைய ஊடகங்கள் மக்கள் மனத்தில் பதித்துவிட்டதனை ஆசிரியர் உணர்த்தியுள்ளதனைக் காணமுடிகிறது. நல்மனம் மட்டுமே திருமணத்தின் அடிப்படைக் கூறாக இருந்த நிலைமாறி அழகும் பணமும் முக்கியக்கூறாக ஆகிவிட்டதனையும் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

ஆந்தை முற்பிறவியில் கருப்பு நிறத்தாளாக மட்டுமின்றி தீப்புண்பட்ட முகத்துடன் கண்ணொளி குறைந்திருந்த நிலையோடும் இருந்ததனை

**நங்கை நிறம் கருமை நன்றென் றுரைப்பாரோ?**
**அங்கவட்கு மேலும் அழகின்மை யாதுரைப்பேன்**
**பிள்ளைப் பருவத்தே பேதை விளையாட்டில்**
**கொள்ளித் தழல் மீது குப்புறவே வீழ்ந்தமையால்**
**கண்ணொன்று ஒளிகுறையக் கன்னம் கரிந்துபடப்**
**பெண்மை அழகிழந்து பேசவொணாத் துன்பமுற்றாள் (531-536)**

என்னும் அடிகளின்வழிப் புலப்படுத்துகிறார். அழகு என்பது புறத்தோற்றம் மட்டுமே என்னும் நிலையை உண்டாக்கிவிட்டதனால் இன்று அழகில் மயங்கித் திருமணம் செய்துகொண்டு, குறுகிய காலத்தில் திருமணவிலக்குப் பெறும் நிலை பெருகிவருவதனைக் காணமுடிகிறது. குணத்தை அறிந்து செய்த திருமணங்கள் வலிமையுடையதாக இருந்த போக்கொழிந்து பணத்தை அடிப்படையாகக்கொண்ட வாழ்வு மலிந்து விட்டதனை

**ஓரிளைஞன் வந்தான்` உடலழகு சற்றுமிலான்**
**கூரியபல் நீண்டிருக்கும் கோணல்வாய் பன்றியொக்கும்**
**நெற்றி குரங்கொக்கும் நீள் கழுத்துக் கொக்கொக்கும்**
**முற்றும் வடுக்கள் முகத்திற் படர்ந்திருக்கும்**
**ஆங்கவனும் நங்கைக்கு அழகில்லை என்றுரைத்து**
**நீங்கினான் பெண்ணின் நிலையுரைத்தல் ஆகுமோ? (549-554)**

என்னும் அடிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஆண் பெண்ணின் அழகினைப் பகடி செய்யும் நிலை காலந்தோறும் பல்வேறு முறைகளில் தொடர்ந்து வருவதனையும் இங்கு ஆணாதிக்கச் சமூகமே நிலைபெற்றிருப்பதனையும் இவ்வடிகளில் எடுத்துக்காட்டியுள்ளார் நூலாசிரியர்.

## சூழலே மனிதனைக் காட்டும்

நல்லவர்களின் அடையாளம் தீயன செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போதும் ஒழுக்கமாக வாழ்வதே. கேட்டினும் உண்டோர் உறுதி எனத் தெய்வப்புலவர் கூறுவதனை இங்கு எண்ணி மகிழலாம். கேடு கூட நல்லவர்களை அடையாளம் கண்டுகொள்ளத் துணைசெய்யும் அளவுகோல் எனக் குறிப்பிடுகிறார் தெய்வப்புலவர். இதனை உறுதிசெய்யும் வகையில் கொடியவனின் மனநிலையினை

**அந்த இழிஞன் அறையவொணா வன்கொடியன்**
**மந்தி மனங்கொண்டுவிட்டான் மங்கை தனித்திருத்தல்**
**கண்டு பிழைநினைந்தான் காதற் குளந்துடிக்கும்**
**பெண்டென்று கொண்டானோ? பித்துற்றான் கீழ்மகன்காண்**
**என் புகல்வேன் ! அந்தோ இதுதானோ ஊழென்பார்?**
**பின்பு நிகழ்ந்ததெல்லாம் பேச நடுங்குகின்றேன் (711-716)**

என்னும் அடிகளில் உணர்த்தியுள்ளார் இந்நூலாசிரியர். ஆந்தை முற்பிறவியில் பெண்ணாகப் பிறந்தபோது அவள் தன்னைப் புறக்கணிக்கும் சமூக நிலையினைக் கண்டு மனம் நொந்து இரவில் தனிமையை விரும்பி நடந்து செல்கிறாள். அப்போது பெண் பார்க்க வந்தவன் அவளைச் சீரழித்துவிடுவதனைக் குறிப்பிட்டுக்காட்டுகிறார். அவ்வாறு அவள் தன்னை இழந்த நிலையினை விளக்கிக்கூற இயலாத ஆசிரியர்' பின் நிகழ்ந்ததெல்லாம் பேச நடுங்குகின்றேன்' எனக் குறிப்பிட்டுள்ளதன்வழி தந்தை நிலையினின்று பெண்ணை நோக்கும் தம் கவியுள்ளத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## மறுபிறவியில் ஆந்தையாக

உயிரினும் மானம் பெரிது என வாழும் மக்களாலேயே அறம் வாழ்கிறது. கற்புடன் வாழ்தல் என்னும் அறப்போக்குத் தமிழகத்தில் தலைசிறந்த பண்பாக இருப்பதனால் அக்கற்பு இழந்தவுடன் வாழக்கூடாதென எண்ணும் தலைவியைப் படம்பிடித்துக்காட்டுகிறார் கவிஞர்.

தன்னை இழந்தபின் வாழ்தலில் பொருள் இல்லை என நினைத்து தன்னை மாய்த்துக்கொண்ட பின்னர் இப்பிறவி பெற்றேன் என ஆந்தைக் கூறுவதனை

**ஓடினாள் ஆற்றுள் உறுமடுவில் போய்விழுந்தாள்**
**பாடு முடிந்ததுகாண் பாழமைதி சூழ்ந்ததுவால்**
**அந்தப்பெண் நான்தான் அடுத்த பிறவியிலே**
**இந்தப் பறவை உருவெய்தித் திரிகின்றேன்** **(787-800)**

என்னும் அடிகளில் எடுத்துக்காட்டுகிறார். அருமையான இந்த உயிரை நீக்குவதற்கு எவருக்கும் உரிமையில்லை. ஓர் உயிரைப் படைக்கும் ஆற்றலில்லாத மனிதருக்கு ஓர் உயிரை நீக்குதற்கு எங்ஙனம் உரிமை இருத்தல் இயலும். தன்னுயிரே ஆயினும் அதனைப் போக்கிக்கொள்ளக்கூடாது. அவ்வாறு போக்கிக்கொண்டால் மறுபிறவியில் இருந்து தப்ப இயலாது என்னும் உண்மையினையும் இங்கு புலப்படுத்தியுள்ளதனைக் காணமுடிகிறது. மனிதப்பிறவியிலிருந்து பறவையாகப் பிறந்த நிலையினைப் பெருமையாக எண்ணும் போக்கினை

**இன்பம்போல் துன்பும் இயற்கைஎன நான்கண்டேன்**
**துன்ப உடலழிந்து தூயவுடல் பெற்றுய்ந்தேன்** **(911-912)**

என்னும் அடிகளின்வழிப் புலப்படுத்துகிறார். இதன் வழி சமூக அவலங்களிலிருந்து விடுபட விழையும் இந்நூலாசிரியரின் மனப்போக்கினைத் தெள்ளிதின் உணர்ந்துகொள்ள முடிகிறது.

## பொய்யுலகும் மெய்யுலகும்

கவிஞர்கள் காண விரும்பும் சமுதாயம் பிரிவினையின்றி வளமும் நலமும் நிறைந்த சமுதாயமாகவே அமையும். அவ்வாறு அமைய விரும்பும் சமுதாயத்தை அவர்களால் உருவாக்க முடிவதில்லை. எனவே தங்களால் இயன்ற அளவிற்கு பிறர் குறைகளைக் களைய விரும்புகின்றனர். அது நினைவில் இயலாது போகும்போது கற்பனையில் ஒரு சூழலை உருவாக்கிக்கொண்டு பறவையைப் பேசவைத்து அப்பறவையிடம் அன்புகொள்ளச் செய்வர். அவ்வகையில் மகாகவி குயிலைக் கண்டது போலவே தங்கப்பா அவர்களும் ஆந்தையினைக் கண்டு அப்பறவையின் மீது கழிவிரக்கம் கொள்ளச்செய்வதனைக் காணமுடிகிறது. இவை அனைத்தும் நினைவா? கனவா? என அறிய இயலாத மனநிலையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதனை

**கங்குல் மயக்கமா? கற்பனையா? பொய்க்கனவா?**
**மங்கையைக் காணேன் மறுபடியும் ஆந்தையே**
**கண்டேன்˙ குழம்பினேன் காரணங்கட் கெட்டாமல்**
**உண்டான சூழ்ச்சிய.்.து ஒன்றும் விளங்கவில்லை** **(1003-1006)**

என்னும் அடிகளில் புலப்படுத்திக்காட்டுகிறார். மேலும் இதன்வழி அனைத்து உயிர்களிடமும் கருணைகொள்ளும் மனநிலை ஏற்படின் அதுவே இந்நூலுக்குப் பெருமையாகும் என்பதனையும்

**விஞ்சு சுவையை வியக்காமல் இவ்வுலகம்**
**கொஞ்சமேனும் தன் குறையுணர்ந்தே இக்கதையால்**
**கூன்நிமிர்ந்தால் சற்றே குருட்டு விழிதிறந்தால்**
**நான் மறப்பேன் என்றன் துயர்** **(1031-1034)**

இவ்வடிகளில் உணர்த்தியுள்ளார். கனவு காணும் வரை கனவே உண்மையாகவும் நினைவில் இருக்கும் போது நினைவே உண்மையாகவும் இருப்பதனைக் காணமுடிகிறது. இயல்பான மனிதர்களைக் காட்டிலும் கவிஞர்கள் உணர்ச்சி நிலையில் இயற்கையுடன் ஒன்றிணைந்து விடுவதற்குச் சான்றாக இந்நூல் அமைந்துள்ளது.

## நிறைவாக

அழகானது புறக்கண்களால் கண்டறிய இயலுவதில்லை. அகக் கண்களால் காணும் திறமுடையவர்களால் மட்டுமே உண்மையான அழகினை உணர இயலும் என்பதனை ஆந்தைப்பாட்டின் வழி நிறுவியுள்ளார் நூலாசிரியர்.

அச்சுறுத்தும் தோற்றம் உடையது ஆந்தை என்னும் மனநிலையினை மாற்றி உயிரைவிட மானம் பெரிது என வாழ்ந்த பெண்ணின் மறுபிறவியே ஆந்தை என்னும் கழிவிரக்கப்பார்வையோடு நோக்க நெறிகாட்டியுள்ளதனைக் காணமுடிகிறது.

உண்மையான அழகு என்பது அன்பினை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது என்பதனையும் அதனை இச்சமூகம் ஏற்காமலே பலருடைய உணர்வுகளைக் காயப்படுத்திவிடுகிறது என்பதனையும் ஆந்தையின் முற்பிறவியின் வழி ம.இலெ.தங்கப்பா எழிலுற எடுத்துரைத்துள்ளதனைக் காணமுடிகிறது.

தாம் உணர்ந்ததை கற்போர் உணரும் வகையில் சொற்களுக்கு உயிரூட்டுபவர்களே கவிஞர்களாகின்றனர். அவ்வாறு சிறந்த சொல்லால் எளிமையாகவும் பொருளால் அருமையாகவும் புனையப்பட்ட ஆந்தைப்பாட்டு அழகியல் நிறைந்த நூலாக இருப்பதனைத் தெள்ளிதின் உணர்ந்துகொள்ள முடிகிறது. **முதன்மை நூல்** தங்கப்பா ம.இலெ. (நூ.ஆ), நடராசன்.அரங்க. புலவர் (உ.ஆ.), ஆந்தைப்பாட்டு, அன்னை அருள் மறுதோன்றி அச்சகம், புதுச்சேரி, 2006.